செய்தி வெளியீடு எண்: 257 நாள்:16.04.2019

# செய்தி வெளியீடு

இந்திய பாராளுமன்ற தேர்தல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற 18 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் 18.04.2019 அன்று நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

1951ம் வருட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 135B ன் கீழ் இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், கடைகள், தொழிற்சாலைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் (IT/ ITES / BPO) உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள் / தினக்கூலி / தற்காலிக தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு தேர்தல் நாளான 18.04.2019 (வியாழக்கிழமை) அன்று அவர்கள் வாக்களிக்கும் வகையில் ஏதுவாக ஊதியத்துடன் கூடிய ஒருநாள் விடுப்பு வழங்கப்பட வேண்டும் என அனைத்து வேலையளிப்பவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு தேர்தல் நடைபெறும் நாளான 18.04.2019 அன்று விடுமுறை அளிக்கத் தவறும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது குறித்து புகார் அளிக்க மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில கட்டுப்பாட்டு அறை சென்னையில் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திலும், மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட தொழிலாளர் நல அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்கள் / தொழிலாளர்கள் கீழ்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொண்டு தங்களது புகார்களை தெரிவிக்கலாம். மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் விவரம் கீழே கொடுக்கப்படுகிறது.

| வ. எண் | மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அலுவலர் பெயர் மற்றும் பதவி | கைபேசி எண் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1. | திரு.சு.பொன்னுசுவாமி,<br>மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர் | 9600198875 | 044–24321438 |
| 2. | திரு.தே.விமலநாதன்,<br>தொழிலாளர் துணை ஆணையர்(ச)–1 | 8778270221 | |
| 3. | திருமதி.டி.புனிதவதி,<br>தொழிலாளர் துணை ஆணையர் | 9786910097 | |
| 4. | திருமதி. வெற்றிச்செல்வி,<br>தொழிலாளர் உதவி ஆணையர்–1 | 9840120925 | |
| 5. | திருமதி. ஜெயலட்சுமி,<br>தொழிலாளர் உதவி ஆணையர்–2 | 9500171623 | |
| 6. | திரு. ஜானகிராமன்<br>தொழிலாளர் உதவி ஆணையர்–3 | 8610308192 | |

மேற்கண்ட தகவல்களை தொழிலாளர் ஆணையர் முனைவர் **ஆர். நந்தகோபால்,இ.ஆ.ப.** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**